## பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில்

# "பிரெஷர்ஸ் டே 26" விழா கோலாகலம்




### வி.கே.ராம்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு

சென்னை, ஆக.30–

திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் "பிரஷர்ஸ் டே 26" விழா நேற்று கல்லூரி முதன்மை அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் அண்ணாநகர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரும், இக்கல்லூரியின் முன்னாள் மாணவருமான பொறியாளர் வி.கே.ராம்குமார், அண்ணா பல்கலைக்கழகப் பேரசிரியரும், ஐஐடி முனைவர் எம். சத்ய பிரசாத், அண்ணா பல்கலைக்கழக இயந்திரவியல் துறைப் பேராசிரியர் முனைவர் டாக்டர். ஷிபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

அறிவியல் மற்றும் மனிதவியல் துறைத் தலைவரும் விழாவின் ஒருங்கிணைப்பாளருமான டாக்டர். டி.டி.இராமன் வழிகாட்டுதலின்படி விழா சிறப்பாக ஒருங்கிணைக்கப் பட்டிருந்தது.

கல்லூரி முதல்வர் முனைவர் பி.ஆர். ரமேஷ்பாபு வரவேற்றார். ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர் ஆர்.நாராயணசாமி விழாவிற்கு தலைமை தாங்கி, தலைமையுரை ஆற்றினார். அறக்கட்டளைச் செயலாளர் பொறியாளர் எம்.டி.ஜி.ராஜ்குமார் சிறப்புரையாற்றினார். கவுரவ விருந்தினராக முனைவர் எம்.சத்யபிரசாத் பொறியியல் துறை சார்ந்த ஆராய்ச்சித் திறன்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

நிர்வாகப் பிரதிநிதி முனைவர் பி.மகேஷ் சிறப்புரைக்குப் பின் அறிவியல் மற்றும் மனிதவியல் துறைப் பேராசிரியர் ஜி. கணேஷ் நன்றி கூறினார்.